**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.207/ஆ5/2023, நாள். 12.01.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023ம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் – பின்பற்ற வேண்டிய கூடுதல் வழிமுறைகள் பின்பற்றுதல் –சார்பாக

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள். 10.01.2022

.....

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இம்மாதம் ஜனவரி 11 முதல் 13 வரை **மார்டன் டைம்ஸ் திரைப்படம்** திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் சுருக்கம் இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது குறித்த கட்டுரை, தேன்சிட்டு இதழிலும் வெளிவந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வையில் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு **அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.**

**திரைப்படம் திரையிடலுக்கு பின் –**

- பார்வையில் காணும் சுற்றறிக்கையில் பகிரப்பட்டுள்ள கேள்விளைத் (For Spotlight) தயாராக வைத்திருக்க வேண்டும். திரைப்படம் மற்றும் அதன் கதைக்களம், மையக் கதாபாத்திரங்கள், துணை நடிகர்கள், கேமரா விளக்குகள், நிகழ்வுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள்.
- மாணவர்கள் ஒரு குழுவாக அல்லது தனி நபராக திரைப்படத்தைச் சுற்றி ஒரு செயல்பாடு செய்யலாம்.

1. படத்தில் இருந்து ஒரு காட்சியை உருவாக்கதல்.
2. படத்தில் நடிக்கும் நடகர்களைப் போலவே நடிப்பது.
3. கதாபாத்திரங்கள் தமிழில் பேசக்கூடியது போல் உருவாக்குதல்.

4. சில குறிப்பிட்ட காட்சிகளைப் பற்றி விவாதித்தல்.
5. இத்திரைப்படத்திற்கு வித்தியாசமான கதையை எழுத முடியுமா அது வேறு ஒரு தொடக்கத்தையும் வேறு முடிவையும் கொண்டிருக்கும்.
6. இத்திரைப்படத்தை ஒரு நாடகமாக உருவாக்க முடியுமா ஆம் எனில் குழுக்களாக உருவாக்க அவர்களை ஊக்குவிக்கவும்.

மேலே குறிப்பிடப்பட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் சிறப்பாக செயல்படும் 1 மாணவன் மற்றும் 1 மாணவியைத் தேர்தெடுத்து, வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கச் செய்ய வேண்டும். வட்டார அளவிலான போட்டிகளிலிருந்து 2 மாணவன் மற்றும் 2 மாணவிகளை மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க செய்ய வேண்டும். மாவட்ட அளிவிலான போட்டியில் இருந்து தலா 1 மாணவன் / மாணவி தேர்ந்தெடுக்கப்படுவர்.

இவ்வாறு மாவட்ட அளவில் ஜனவரி மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 76 மாணவ / மாணவியரும் பிப்ரவரி மாதம் தேர்தெடுக்கப்பட்ட 76 மாணவ / மாணவியலும் என மொத்தம் 152 மாணவ / மாணவியர் கலந்து கொள்ளும் சிறப்பு சிறார் திரைப்பட விழா மற்றும் பயிற்சி முகாம் பிப்ரவரி 27 முதல் மார்ச் 3 வரை நடைபெறும்.

எனவே ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் சிறப்பாக செயல்படும் 1 மாணவன் மற்றும் 1 மாணவியைத் தேர்தெடுத்து, வட்டாரக அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஏதுவாக தேர்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியின் விவரத்தை அரசு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் மூலமாக , வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) அலுவலகத்திற்கு 18.01.2023 –க்குள் அனுப்ப வேண்டும். பெறப்பட்ட மாணவர்கள் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு 19.01.2023 அன்று காலை 11.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வட்டார அளவில் கலந்துக்கொள்ளுமாறு உறுதி செய்தல் வேண்டும் என வேலூர் மாவட்ட கல்வி அலுவலருக்கு (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

அரசு உயர்நிலை மற்றும் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) அலுவலகத்திற்கு 18.01.2023–க்குள் அனுப்ப வேண்டும். இவ்வலுவலகத்திற்கு 19.01.2023 அன்று காலை 11.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வட்டார அளவில் கலந்துக்கொள்ளுமாறு உறுதி செய்தல் வேண்டும் என வேலூர் மாவட்ட கல்வி அலுவலருக்கு (இடைநிலைக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

**(வட்டார மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறும் இடம் மற்றும் தேதி இணைக்கப்பட்டுள்ளது)**

இணைப்பு –

1. பார்வையில் காணும் செயல்முறைகள்
2. வட்டார அளவில் போட்டிகள் நடைபெறும் விவரம்
3. மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறும் விவரம்.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)
3. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர்/மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

(இவ்வலுவலக இணையதளம் மற்றும் மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

இணைப்பில் உள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறுவதற்கான போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். )

**வட்டார அளவில் போட்டிகள் நடைபெறும் விவரம் –**

**நாள்.– 20.01.2023** **நேரம் – காலை 10.00 மணி அளவில்**

| வ. எண். | ஒன்றித்தின் பெயர் | போட்டி நடைபெறம் இடம் | பொறுப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|---|
| 1 | வேலூர் நகர் / புறநகர் | அரசு மேல்நிலைப் பள்ளி, கொணவட்டம் | தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கொணவட்டம் | மாவட்ட கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளர். |
| 2 | அணைக்கட்டு | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு | தலைமையாசிரியர், அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு | |
| 3 | காட்பாடி | அரசு (ம) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | தலைமையாசிரியர், அரசு (ம) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி | |
| 4. | கே.வி. குப்பம் | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, கே.வி. குப்பம் | தலைமையாசிரியர், அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, கே.வி. குப்பம் | |
| 5. | கணியம்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, கணியம்பாடி | தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கணியம்பாடி | |
| 6. | குடியாத்தம் | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை, குடியாத்தம் | தலைமையாசிரியர், அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை, குடியாத்தம் | |
| 7. | பேர்ணாம்பட்டு | அரசு (ம) மேல்நிலைப் பள்ளி, பேர்ணாம்பட்டு | தலைமையாசிரியர், அரசு (ம) மேல்நிலைப் பள்ளி, பேர்ணாம்பட்டு | |

**மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறும் விவரம் –**

**நாள்.– 27.01.2023** **நேரம் – காலை 10.00 மணி அளவில்**

**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.**